இணைந்த சேவை சுற்றறிக்கைக் கடிதம் : ***04/2019***

எனது இலக்கம் : *PA/CS/POLICY/*சேவைப் பிரச்சினைகள்
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு *07*.

*2019.10.18*

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் II மற்றும் தரம் I இற்கு 2013.04.02 ஆந் திகதி முதல் தரமுயர்வு வழங்குதல்/ தரமுயர்வுகளை முற்திகதியிடல் அடிப்படையில் சம்பள ஏற்றமொன்று குறைவடைவது தொடர்பில் நிவாரணம் வழங்குதல்**

*2013.12.11* ஆந் திகதிய *1840/34* ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பு *2013.04.02* ஆந் திகதி நடமுறைப்படுத்தப்பட்டதன் அடிப்படையில், *2004.12.24* ஆந் திகதிய *1372/23* ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க *2013.04.02* ஆந் திகதியின் பின்னர் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் *II* அல்லது *I* ஆம் தரத்திற்கான தரமுயர்வு, *2013.04.02* ஆந் திகதி கிடைத்ததன் அடிப்படையில் சம்பள ஏற்றம் குறைந்துள்ளதனால் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை நிவர்த்தி செய்யுமாறு என்னிடம் கோரப்பட்டுள்ளது.

*02.* மேலே குறிப்பிட்டவாறு நிகழ்ந்துள்ள சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்காக தாபனப் பணிப்பாளர் நாயகத்தினதும் தேசிய சம்பளங்கள், பதவியணி ஆணைக்குழுவினதும் அரச சேவை ஆணைக்குழுவினதும் அனுமதியின் அடிப்படையில் பின்வரும் விதத்தில் நடவடிக்கை எடுக்குமாறு அறியத் தருகின்றேன்.

> *1840/34* ஆம் இலக்க *2013.12.11* ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பு *2013.04.02* ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வந்ததையடுத்து அந்தச் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுககு இணங்க *2013.04.02* ஆந் திகதி முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் *II* அல்லது *I* ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெற்ற உத்தியோகத்தர்களின் அந்தத் தரமுயர்வு, சம்பளம் தயாரித்தல் பணிக்காக மட்டும், *2013.04.02* ஆந் திகதியின் பின்னர் எழுந்த முன்னைய தரத்தின்/ முன்னர் கிடைத்த உரிய சம்பள ஏற்றத் திகதியில் நிகழ்ந்தது என்று கருதி சம்பள மாற்றங்களைச் செய்வது அவசியமாகும்.

*03.* மேலே *02* ஆம் பந்தியில் உள்ளவாறு சம்பள மாற்றங்களைச் செய்ததன் பின்னர் எதிர்கால சம்பள ஏற்றத் திகதியாக உத்தியோகத்தரின் உண்மையான தரமுயர்வுத் திகதியைக் கருதுதல் வேண்டும்.

ஒப்பம்./ கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்- *1.* செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு - தகவலுக்காக
*2.* அனைத்து மாகாண பிரதம செயலாளர்களுக்கும் - தகவலுக்காக